மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.286/2015

ரத்தினசாமி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மாதப்பன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. நாச்சம்மாள்
3. சுப்பிரமணி
4. வளர்மதி ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசபிரதிவாதிகள்

இம்மனு கடந்த 08.04.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 22, விதி 4 மற்றும் பிரிவு 151ன் கீழ் கடந்த 04.02.2023ம் தேதியன்று இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியான மாதப்பன் கடந்த 04.02.2023ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன மாதப்பனின் சட்டப்பூர்வ வாரிசுகள்

விபரத்தை வழங்கிட வேண்டி மனுதாரர் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்தார். அதனை நீதிமன்றம் அனுமதித்து பிறப்பித்த உத்தரவின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து மனுதாரருக்கு மற்றொரு குறிப்பாணை மூலம் 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசு விபரபட்டியலை வழங்கிட காலதாமதம் ஏற்பட்டதால் தான் உரிய நேரத்தில் 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க முடியாமல் 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மேற்படி காலதாமதமானது மனுதாரரின் தரப்பில் ஏற்பட்ட குறைபாடல்ல என்பதால் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் உத்தேசபிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 3 உத்தேச பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு உண்மைக்கு புறம்பானது. மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. கடந்த 04.02.2023ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் மாதப்பன் இறந்துவிட்டார் என்பது உண்மை. அவரது வாரிசுகள் குறித்து எல்லா சங்கதிகளும் பக்கத்து நிலத்துக்காரரான மனுதாரருக்கு நன்கு தெரியும். வழக்கில் அவருக்கு நல்ல வாதம் இல்லாததால் வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துபோன நிலையில் அவரது வாரிசுகளுடைய குறிப்புகளை கொடுக்கும்படி இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரிடம் கோரி நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தினார். 1ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் இறந்து போனவரின் வாரிசுகளின் குறிப்புகளை சேகரித்து கடந்த 20.07.2023 அன்றே குறிப்பாணை மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். ஆனால் அதைப் பெற்றுக்கொண்ட பின்பும் உடனடியாக வாரிசுகளை சேர்க்க வேண்டிய நடவடிக்கைகளை மனுதாரர் மேற்கொள்ளவில்லை.

(ii) இம்மனுவிலும் காலதாமதத்திற்கான காரணங்கள் எதையும் கூறாமல் உரிய நேரத்தில் மனுவை தாக்கல் செய்யாமல் போனதால் ஏற்பட்ட வழக்கு அற்றுப்போனதை

ரத்து செய்யவேண்டும் என்றும், யாரை கட்சி சேர்க்க வேண்டுமோ அவர்களை சேர்க்காமல் 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றும் கூறுவது சட்டப்படியோ, நியாயப்படியோ ஏற்கத்தக்க காரணம் அல்ல. இறந்துபோனவரின் வழக்கறிஞர் இறந்து போனவருடைய வாரிசுகள் குறித்த தகவலை கூற வேண்டும் என கூறுவது எந்த விதிகளின்படியும் அல்லது சட்டத்தின்படியும் வகுக்கப்படவில்லை. அவ்வாறே அவர்கள் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் அவ்வாறு தகவல் கொடுத்த பின் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 உத்தேச பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியான மாதப்பன் கடந்த 04.02.2023ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன மாதப்பனின் சட்டப்பூர்வ வாரிசுகள் விபரத்தை வழங்கிட வேண்டி மனுதாரர் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்ததில் அதனை நீதிமன்றம் அனுமதித்து பிறப்பித்த உத்தரவின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து மனுதாரருக்கு மற்றொரு குறிப்பாணை மூலம் 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசு விபரபட்டியலை வழங்கிட காலதாமதம் ஏற்பட்டதால் தான் உரிய நேரத்தில் 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க முடியாமல் 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி காலதாமதமானது மனுதாரரின் தரப்பில் ஏற்பட்ட குறைபாடல்ல என்பதால் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க முடியாமல் 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி

காலதாமதமானது மனுதாரரின் தரப்பில் ஏற்பட்ட குறைபாடல்ல என்பதால் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் இறந்து போனவரின் வாரிசுகளின் குறிப்புகளை சேகரித்து கடந்த 20.07.2023 அன்றே குறிப்பாணை மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றும், ஆனால் அதைப் பெற்றுக்கொண்ட பின்பும் உடனடியாக வாரிசுகளை சேர்க்க வேண்டிய நடவடிக்கைகளை மனுதாரர் மேற்கொள்ளவில்லை என்றும், இம்மனுவிலும் காலதாமதத்திற்கான காரணங்கள் எதையும் கூறாமல் உரிய நேரத்தில் மனுவை தாக்கல் செய்யாமல் போனதால் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்யவேண்டும் என்றும், யாரை கட்சி சேர்க்க வேண்டுமோ அவர்களை சேர்க்காமல் 106 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றும் கூறுவது சட்டப்படியோ, நியாயப்படியோ ஏற்கத்தக்க காரணம் அல்ல என்றும், இறந்துபோனவரின் வழக்கறிஞர் இறந்து போனவருடைய வாரிசுகள் குறித்த தகவலை கூற வேண்டும் என கூறுவது எந்த விதிகளின்படியும் அல்லது சட்டத்தின்படியும் வகுக்கப்படவில்லை என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வாதம் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 04.02.2023ம் தேதியில் இறந்துள்ளதும் தெரிய வருகிறது. மேலும் காலதாமதத்தை மன்னிக்க கோரி காலவரையறைச் சட்டம், பிரிவு 5ன் கீழ் இ.ம.எண்.02/2023 தாக்கல் செய்யப்பட்டு, அதனுடன் சேர்த்து மேற்படி பிரதிவாதியின் வாரிசுகளை உரிய காலவரையறைக்குள் இவ்வழக்கில் சேர்க்காததால் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 9ன் கீழும், இறந்த பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க

கோரி உ.வி.மு.ச. கட்டளை 22 விதி 4ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இவ்வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொள்கையிலும், இறந்த பிரதிவாதியின் வாரிசுகள் பற்றிய விவரம் தெரியாததால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து நடவடிக்கை எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாக வாதி தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர் இவ்வழக்கினை நடத்த ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் உரிய காலவரையறைக்குள் மனுதாரர் இறந்த 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்காததற்கு மனுதாரர் முன் வைத்துள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதை கருத்தில் கொள்கையில், நீதியின் நலன் கருதி செலவுத்தொகையின்றி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.04.23 17:02:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.04.23 17:02:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.